**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

# O.S. No.79/2020

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 - ம் நாள் வாதி தரப்பு வா.சா. 1 சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 15.03.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | ஜாதி | : |
| த /பெயர் | : | வடிவேல் | மதம் | : |
| கிராமம் | : | | தொழில் | : |
| வட்டம் | : | | வயது | : |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதிக்கு நான் குடியிருக்கும் ஆலத்தூர் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.7/2 ஆகும். 3 மா மனைக்கட்டு என்பதை எனது சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேன். புல எண்.7/2 எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை. சீதாராமைய்யர் என்பவரிடமிருந்து எனது அப்பா கிரைய ஒப்படைவு பத்திரம் எழுதி கொடுத்தார்.

2... 45 வருடத்திற்கு முன்பாக கிரைய ஒப்படைவு பத்திரம் எழுதி வாங்கியது தெரியும். ஆனால் நேரிடையாக தெரியாது. சீதாராமைய்யர் என்பவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. சீதாராமைய்யர் என்பவருக்கு வாரிசுகள் இருக்கிறார்கள் என்றாலும், நான் தற்போது வாரிசுகள் இல்லை என மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். அதில் என்ன சொல்லியுள்ளார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.